**S.C.No. 129 / 2021**

**PW2 – Thiru. Ayub Khan S/o. Mohammed Ali Khan**

**24.02.2026**

**(A1 died C/A. A2 absent, Petition filed and allowed)**

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வர வழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை :**

**நேரம் 12.10 மணி**

இவ்வழக்கில் சாட்சியம் அளித்த வஷித்கான் என்னுடைய தம்பி என்றால் சரிதான். என் தம்பி திருமுல்லைவாயல், ரவீந்திரன் நகரில் Modern Foods என்ற பெயரில் ஓட்டல் நடத்திவருகிறார் என்றால் சரிதான். இவ்வழக்கில் மதிவதனன் என்பவர் என் தம்பி ஓட்டல் அருகில் அண்ணாமலை என்ற பெரியல் ஓட்டல் நடத்தி வருகிறார் என்றால் சரிதான். என் தம்பிக்கும் அவருக்கும் ஓட்டல் நடத்தி வருவதால் வியாபார போட்டி இருந்தது என்றால் சரிதான். சம்பவம் சமயத்தில் மதிவதனன் அந்த ஓட்டலை வேறு ஒரு நபருக்கு வாடகைக்கு விட்டிருந்தார் என்றால் சரிதான். 19–11–2015 அன்று மதிவனனும் அவருடைய நண்பரும் எங்கள் ஓட்டலுக்கு சாப்பிடவந்தார்கள் என்ற விவரம் எனக்கு என் தம்பி சொல்லி தான் தெரியும். அங்கு வந்த நபர்கள், பிரியாணி, Fried Rice கேட்டு என் தம்பியிடம் தகராறு செய்தார்கள் என்ற விவரம் என் தம்பி சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். அந்த சம்பவத்தின் தொடர்ச்சியாக 1ஆம் எதிரி மதிவதனன் என் தம்பியின் கழுத்தில் கத்து வைத்து என் தம்பி கடையின் கண்ணாடியை உடைத்தார் என்ற விவரமும் என் தம்பி சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். சம்பவம் நடந்த உடனே போலீசார் சம்பவயிடத்திற்கு உடனடியாக Patrol ல் வந்தார்கள் என்றால் சரிதான். அந்த சமயத்தில் நான் ஓட்டலுக்கு வந்துவிட்டேன். போலீசார் சம்பவயிடத்திலிருந்து கத்தி, உடைந்த கண்ணாடி ஆகியவற்றை Patrol வாகனத்தில் எடுத்து சென்றது எனக்கு தெரியும் என்றால் சரிதான். அதன்பின்னர் என்னையும், என் தம்பியையும் காவல் நிலையத்திற்கு இரவு 10.30 மணிக்கு

போலீசார் வரசொன்னார்கள் என்றால் சரிதான். காவல் நிலையம் சென்றபோது எங்கள் இருவருக்கும் தமிழ் தெரியாததால் போலீசார் தயார் செய்த புகாரில் என் தம்பி கையொப்பமிட்டார் என்றால் சரிதான். புகாரில் உள்ள விவரம் இருந்தது என்றால் அப்போது பக்கத்து கடைவைத்திருக்கும் Kalif படித்து பார்த்து விவரங்கள் கூறினார். Kalif ஐ நாங்கள் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றோம். சம்பவத்திற்கு மறுநாள் நாங்கள் காவல் நிலையத்திற்கு போலீசார கேட்டுக்கொண்டபடி கோவில்பதாகையை சேர்ந்த Ishaq S/o. Abdul Malik, Naushad Ali S/o. Ahmed Basha ஆகியோரையும் சாட்சியாக காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றோம் என்றால் சரிதான். போலீசார் வழக்கு பதிவுசெய்த பிறகு தான் 2 ஆம் எதிரியை தெரியும் என்றால் சரிதான். அதற்கு முன்புவரை 2 ஆம் எதிரி யார் என்று தெரியாது என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்து இந்த வழக்கு சம்பந்தமாக வாக்குமூலம் வாங்கும்போது என் தம்பியின் கடைக்கு ஏற்பட்ட சேதாரம் ரூபாய் 30 ஆயிரம் என்று என் தம்பி கூறியதன் அடிப்படையில் போலீசாரிடம் தெரிவித்தேன் என்றால் சரிதான். நானோ, என் தம்பியோ யாரையும் அழைத்து வந்து சேதாரம் மதிப்பு செய்யவில்லை என்றால் சரிதான். போலீசாரும் யாரையும் அழைத்து வந்து சேதாரம் மதிப்பு செய்யவில்லை என்றால் சரிதான். போலீசார் சம்பவயிடத்தில் புகைப்படம் எடுத்தார்களா என்றால் எடுத்தார்கள். சம்பவத்தன்று SI புகைப்படம் எடுத்தார். அப்போது இரவு 7.30 மணியிருக்கும். போலீசார் சம்பவயிடத்திலிருந்து எடுத்து சென்ற கத்தி எதிரி மதிவதனன் கொண்டு வந்த கத்தி என்றால் அது என் தம்பி சொல்லி தான் தெரியும். சம்பவ சமயத்தில் நான் சாப்பாட்டுக்கு சென்றிருந்தேன். சம்பவயிடத்தில் இல்லை. போலீசார் விசாரிக்கும் போதும் நான் அவ்வாறு தான் கூறினேன்.

**நேரம் 12.25 மணி**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.